[2012 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ளவேண்டும். வழிகாட்டி மதிப்பு உயர்ந்ததற்கும், புதிய சார் பதிவாளர் அலுவலகங்கள் திறப்பதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். ஏற்கெனவே, 2005–லே மூடப்பட்டதற்குக் காரணம், அங்கே குறைந்த அளவிலே ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டது ஒரு காரணம். அதனால், அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது. சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்படவேண்டுமென்றால், தொடராச் செலவினம் ரூ.13 இலட்சம், தொடர்ந்து ஆண்டுக்கு ரூ.15 இலட்சம் செலவு செய்யப்படவேண்டும். அந்த 15 இலட்சம் ரூபாய் குறிப்பிட்ட அந்த சார் பதிவாளர் அலுவலத்திற்கு வருமானமாக வரவேண்டும். அப்படி இல்லாத சார் பதிவாளர் அலுவலகங்கள்தான் அன்றைக்கு மூடப்பட்டன.*

அதுமட்டுமல்லாமல், அப்படி மூடப்பட்டதனாலே அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய கிராம மக்களுக்கு பதிவு செய்வதற்கு வேறு எதுவும் இடம் ஒதுக்கப்படவில்லை என்று அர்த்தம் இல்லை. அதைவிட வசதியாக, அனைத்து வசதிகளும் உள்ள வேறு ஒரு பகுதியிலே மக்கள் சென்று வரக்கூடிய அளவிற்கு, சார் பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அப்படி எந்த இடத்திலே சார் பதிவாளர் அலுவலகம் இயங்கி வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரியப்படுத்தவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி, ஏற்கெனவே மூடிய இரண்டு சார் பதிவாளர் அலுவலகங்களிலே, மக்களுக்கு வசதிகள் குறைவாக இருந்தால், அதிகமான ஆவணங்கள் அங்கு பதியப்படும் வாய்ப்புகள் இருக்கும்பட்சத்திலே, கண்டிப்பாக அரசு அதைக் கவனத்திலே எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 18]

113—

சாலையை அகலப்படுத்துதல்

***269—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, செருப்பாலூர்–மாத்தூர் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதிக்கு உட்பட்ட செருப்பாலூர்–மாத்தூர் சாலை மாவட்ட இதரச் சாலை (கி.மீ. 0/0–2/0) ஆகும். இச்சாலை ஒரு வழித்தடமாக போக்குவரத்திற்கு ஏற்றவகையில் உள்ளதால் தற்போது அகலப்படுத்துவதற்கான அவசியம் ஏற்படவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில் மாத்தூர் தொட்டிப்பாலம் ஆசியா கண்டத்திலே மிகவும் உயரமான தொட்டிப்பாலம் என்பதால், இதனைப் பார்வையிட ஏராளமான சுற்றுலாப் பயணிகள் பேருந்துகளில் தினந்தோறும் வந்து செல்கிறார்கள். செருப்பாலூர்–கல்லடிமாமூடு–மாத்தூர் சாலை மிகவும் குறுகியதாக இருப்பதால், பேருந்துகளில் செல்ல முடியாமல் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இந்தச் சாலையை அகலப்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட செருப்பாலூர்–மாத்தூர் சாலை என்பது நெடுஞ்சாலைத் துறையின், நாகர்கோவில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பிலுள்ள மாவட்ட இதர சாலையான கல்லடிமாமூடு–அண்டூர் சாலையிலிருந்து மாத்தூர் தொட்டிப்பாலம் செல்லும் மாவட்ட இதர சாலை கி.மீ. 0/0–2/0 கி.மீ. உள்ள பகுதி ஆகும். அரசு கொள்கையின்படி தற்சமயம், அனைத்து மாநில நெடுஞ்சாலைகளிலும் இருவழித் தடமாகவும், மாவட்ட முக்கிய சாலை இடைவழித் தடமாகவும் படிப்படியாக அகலப்படுத்தப்பட்டு வருகின்றன. செருப்பாலூர்–மாத்தூர் சாலை ஒரு வழித் தடமாக உள்ளது. தற்சமயம், போக்குவரத்திற்கு ஏற்றவகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. பிற்காலத்தில் போக்குவரத்துச் செறிவு அதிகரிக்கும்போது அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தச் சாலையை அகலப்படுத்தும் பணியை இந்த நிதியாண்டிலேயே செய்து தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியிலே மாவட்ட முக்கிய சாலையில் ரூபாய் 4.78 கோடி மதிப்பில் 12.20 கி.மீ. சாலையை ஒரு வழித்தடத்திலிருந்து இடைவழித் தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் ஏழு பணிகளும், மாவட்ட இதர சாலைகள் ரூபாய் 29 இலட்சம் மதிப்பில் மூன்று கட்டுமானப் பணிகளும் அடங்கும். இப்பணிகள் அனைத்தும் செயலாக்கப்பட்டு வருகின்றன. செருப்பாலூர்–மாத்தூர் சாலை தற்சமயம் போக்குவரத்துக்கு ஏற்றவகையில் பராமரிக்கப்பட்டு வருகின்ற காரணத்தினாலே, பிற்காலத்தில் போக்குவரத்துச் செறிவு அதிகரிக்கின்றபொழுது மாண்புமிகு

2012 ஏப்ரல் 18]

உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தச் சாலையை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.

திரு. அ. நாஞ்சில் முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரம் போகும் வழியில், ஒழுகினசேரி பகுதியிலே உள்ள சாலை ஒரு புறத்தில் 25 அடி அகலம் மட்டும் உள்ளது. அந்த 25 அடி சாலையோரத்திலே ஒரு பெரிய சாக்கடை செல்கிறது. அந்தச் சாலை வழியாக சுமார் 1,000 வண்டிகள் செல்கின்றன. அந்தச் சாலையை அகலப்படுத்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, வடசேரி பகுதி. வடசேரியிலிருந்து இறச்சக்குளம் போகும் வழியிலே சுமார் ஆறேழு கல்லூரிகள் இருக்கின்றன. காலை 9 மணியளவில் இரண்டு மணி நேரத்திற்கு அந்தச் சாலையில் வண்டியில் செல்ல முடியாத அளவிற்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அதுபோல மாலை சுமார் 4–00 மணியிலிருந்து 6–00 மணி வரை அந்தப் பகுதியில் யாரும் போக முடியாது. அந்த அளவுக்கு நெருக்கடி உள்ள இடமாகும். அதைப்போல, கோட்டாறு–கன்னியாகுமரி போகும் சாலை. கோட்டாறு–பீச் ரோடு போகும் சாலைப் பகுதியில் எப்போதும் நெருக்கடியாக இருக்கிறது. அந்தச் சாலையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அகலப்படுத்த ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சில் முருகேசன், நீங்கள் 'அதுபோல, அதுபோல' என்று சொல்லிக்கொண்டிருந்தால், அது போய்க் கொண்டேதான் இருக்கும். கேள்வியை சுருக்கமாகக் கேட்டு உரையை முடியுங்கள்.

திரு. அ. நாஞ்சில் முருகேசன்: சரி. அதுபோல, மேற்கூறிய எனது கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கும் 'அதுபோல' தானா? (சிரிப்பு) மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலை குறுகிய சாலையாக இருக்கின்றது. ஆகவே, போக்குவரத்து அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. அதனை அகலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலைகளை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள்.

திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் முக்கியமான சுற்றுலாத் தலத்தை உள்ளடக்கிய ஒரு மாவட்டம் ஆகும். அந்த மாவட்டத்திற்கு சாவடி பகுதிகளிலிருந்து இரண்டு பிரதான சாலைகள் வருகின்றன. ஒன்று, மேட்டுப்பாளையம்–கோத்தகிரி–உதகை சாலை; இன்னொன்று, மேட்டுப்பாளையம்–குன்னூர்–உதகை சாலை. மேட்டுப்பாளையம்–கோத்தகிரி–உதகை சாலை நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானதாக உள்ளது. அந்தச் சாலை மிகவும் சீராகவும், நல்லபடியாகவும் உள்ளது. ஆனால், மேட்டுப்பாளையம்–குன்னூர்–உதகை சாலை, கக்கநல்லா வரை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் 2005 ஆம் ஆண்டில் பணிகள் எடுக்கப்பட்டு, 2006–2007 இல் அந்தப் பணிகள் முடிக்கப்பட்டன. அந்தச் சாலை இப்பொழுது மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்து உள்ளது. இப்பொழுது, சீசன் ஆரம்பிக்கின்ற வேளையில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் அந்தப் பகுதியில் வந்து செல்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன், கேள்விக்கு வாருங்கள்.

2012 ஏப்ரல் 18]

திரு. கா. ராமச்சந்திரன்: *அந்தச் சாலையை மீண்டும் நமது மாநில நெடுஞ்சாலைத் துறை எடுத்து சீரமைக்க வேண்டும். அதற்குச் சாத்தியக்கூறு உள்ளதா என்பதை நான் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குட்பட்ட சாலையாகும். இது மாநில அரசால் பராமரிக்கப்படுகிற சாலை இல்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தச் சாலை மிக மோசமாக இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதை மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்திற்குக் கடிதம் மூலமாகக் குறிப்பிட்டு, அந்தச் சாலையைச் சீரமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம், ஆலடிப்பட்டி–நல்லூர் சாலை மிகவும் குறுகிய சாலையாக உள்ளது. ஆலடிப்பட்டி–நல்லூரில்தான் கல்லூரிகள் உள்ளன. இது ஆலங்குளத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தொலையில் உள்ளது. ஆகவே, இந்த குறுகிய சாலையை அகலச் சாலையாக மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே கல்லூரிகள் இருப்பதாகவும், போக்குவரத்து அதிகமாக இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து அங்கே போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருந்தால், அந்தச் சாலையை அகலப்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

[2012 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

முற்பகல் 10—40

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழில் முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களில் முதன்மைபெறும் சிவகாசி, விருதுநகர் ஆகிய இரு நகரங்களை இணைக்கும் 26 கிலோ மீட்டர் சாலையை* traffic intensity*–க்குத் தக்கவாறு அகலப்படுத்தி, 9 கல்லூரிகள் நிறைந்த இச்சாலையை, காமராஜர் கல்விச் சாலை, என்று பெயரிட வேண்டும் என்ற கோரிக்கையை அரசு நிறைவேற்றுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், திரும்பவும் மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் கேட்கிறீர்கள்.* Naming of the Highways. *என்பது வேறு.* Naming of the Highways is separate. *மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேட்கக்கூடாது. சாலையை அகலப்படுத்த முடியுமா என்பதுதான் மூலக் கேள்வி. மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள், சாலையை அகலப்படுத்த முடியுமா என்பது கேள்வி; அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியிலே அதிகமாக போக்குவரத்து இருப்பதாகவும், கல்லூரிகள் இருப்பதாகவும், அந்தச் சாலையிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதாகவும் இங்கே குறிப்பிடுகின்றார்கள். அதை ஆய்வு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தால், அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அனுமதியைப் பெற்று அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

2012 ஏப்ரல் 18]

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை முதல் சூராணம் வரை உள்ள சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அகலப்படுத்தித் தருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அந்தச் சாலையில் அதிகமான அளவு போக்குவரத்து இருக்கிறது. மேலும், அந்தச் சாலையில் நூற்றுக்கணக்கான கண்மாய்கள் குறுக்கிடுகின்ற காரணத்தால் மழைக்காலங்களில் சாலையில் வழுக்கு ஏற்பட்டு, பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, பள்ளிக் குழந்தைகள் எல்லாம் பள்ளிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அதிக முக்கியத்துவம் கொடுத்து அந்தச் சாலையை மாவட்ட முக்கிய சாலையாக அறிவித்து, அகலப்படுத்தித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலையை அகலப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதாகவும் அதை அகலப்படுத்திக் கொடுத்தால் அந்தப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க முடியும் என்ற ஒரு கருத்தினை இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து நிதிநிலைக்கு ஏற்ப அந்தச் சாலையை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட துறையூர் ஒன்றியம், காளிப்பட்டி முதல் சொரத்தூர் வழியாகச் செல்லுகின்ற தார்ச் சாலையை அகலப்படுத்திக் கொடுத்தால் துறையூர் நகரப் பகுதிக்குச் செல்லாமல், துறையூர்* bye–pass *வழியாகச் செல்ல முடியும். வாகன நெருக்கடியைத் தவிர்க்க முடியும். எனவே, அந்தச் சாலையையும், முருகூர் முதல் புளியஞ்சோலை வரை செல்லுகின்ற தார்ச் சாலையில் சென்ற நிதி ஆண்டில்*

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து, முருகூர் முதல் ஆலத்துடையான்பட்டி வரை சுமார் 10 கிலோ மீட்டர் தார்ச் சாலையை அகலப்படுத்திக் கொடுத்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதால், ஆலத்துடையான்பட்டி முதல் புளியஞ்சோலை வரை செல்லுகின்ற மீதமுள்ள சுமார் 8 கிலோ மீட்டர் தூர தார்ச் சாலையை அகலப்படுத்திக் கொடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலையை அகலப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் இருக்கின்ற குறுகிய சாலைகளெல்லாம், அதாவது ஒரு வழிச் சாலை இடைவழிச் சாலையாகவும், இடைவழிச் சாலை இருவழிச் சாலை படிப்படியாக அகலப்படுத்தப்படும் என்று தெரிவித்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் இருந்து மதுக்கூர் வரை செல்லக்கூடிய சுமார் 16 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை 2005–2006 ஆம் நிதி ஆண்டிலே சுமார் 90 இலட்சம் ரூபாய் அளவிலே மேம்பாடு செய்யப்பட்டது. அதன் பின்பு* major maintenance *எதுவும் செய்யப்படவில்லை. எனவே, தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஆய்வு செய்து முழுவதுமாக அந்தச் சாலையை மேம்பாடு செய்ய ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2012 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சாலை மிக மோசமாக இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். 2006–லே அந்தச் சாலை போடப்பட்டது. அதற்குப் பின்பு எவ்வித பராமரிப்பும் இல்லாமல் இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து நிதிநிலைக்கு ஏற்ப அந்தச் சாலையைப் பராமரிப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், திரு. எஸ்.எஸ். சிவசங்கர், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. ஓ.கே. சின்னராஜ், திரு. மு. அருண் சுப்பிரமணியன், திரு. டி. சுரேஷ்குமார், திரு. ஆர். கணேஷ்குமார் மற்றும் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் ஆகியோருடைய தொகுதிகளில் சாலையை அகலப்படுத்த வேண்டுமென்ற அந்தக் கருத்து பதிவு செய்யப்படுகிறது.

வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

114—

நியாய விலைக் கடை

***460—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அம்மாப்பேட்டை கிராமத்திற்குப் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?